Literacy for a Billion

Movie: Vettayadu Vilaiyadu
Year: 2006

Song: Manjal Veyil
Lyricist: Thamarai

தய்ய தக்க தக்கா
நீ எங்கேருக்க மக்கா
சோளக்காட்டு சொக்கா
அட காத்திருக்கா அக்கா
தய்ய தக்க தக்கா
நீ எங்கேருக்க மக்கா
சோளக்காட்டு சொக்கா
அட காத்திருக்கா அக்கா

யக்கா யக்கா தவளக்கா
ஏரிக்கரை மீனக்கா
எப்படி வேணும் மாப்பிள்ள
எடுத்துவிடுறேன் கேளக்கா
பட்டாம்பூச்சி கேட்டுக்கோ
தொட்டாசிணுங்கி கேட்டுக்கோ
அக்காகுருவி கேட்டுக்கோ
பக்கா ஸ்டை கேட்டுக்கோ
அக்காக்கேத்த மாப்பிள்ள
எங்கிருக்கான் பயபுள்ள
அக்காக்கேத்த மாப்பிள்ள
எங்கிருக்கான் பயபுள்ள

அய்யனாருதான் போல
ரொம்ப பெரிய மீசையும்
வேணாம்
அம்பி பையன போல
அட கம்பி மீசையும் வேணாம்
ரொம்ப படிச்சவன் வேணாம்
ஸ்கூல் பென்ச் தேய்ச்சவன்
வேணாம்
பென்சில் பாடியும் வேணாம்
மைக் டைசன் போலவும்
வேணாம்
காது சூட்டில் வேர்வை வழிய
செல்ல் பேசி கெஞ்சணும்

மேரேஜ் ஆன பிறகும் கூட
சார்ஜரோட சுத்தணும்
ஆபீஸ் போனா என்னை
மறக்கக் கூடாது
வீட்டில் ஆபீஸ பத்தி
அவன் பேசக்கூடாது
தோளில் நான் சாயும்போது
தோழன் போல் மாற வேண்டும்
தாய்போல எனை தாங்கும்
ஆண் வேண்டும்
அக்காக்கேத்த மாப்பிள்ள
எங்கிருக்கான் பயபுள்ள
அக்காக்கேத்த மாப்பிள்ள
எங்கிருக்கான் பயபுள்ள

கட்டம் கட்டமாத்தானே
ஒரு சட்டை போட்டவன்
வேணாம்
கட்டம் ஒண்ணு நான் போட்டா
அதை தாண்டி போறவன்
வேணாம்
ஷாப்பிங் பண்ண நான் போனா
பில்லை பாத்து
முறைப்பவன் வேணாம்
தூண்டில் மாட்டின மீனா
அவன் வந்து சிக்கணும் தானா
சின்ன வயசு போட்டோ பாத்து
என்னை கண்டு பிடிக்கணும்
எனக்கு வந்த காதல் கடிதம்
சேர்ந்து படிச்சு கிழிக்கணும்
சந்தேகப் பார்வை
அவன் பார்க்க கூடாது
நான் சந்தேகமா பார்த்தா
அவன் மிரளக் கூடாது
என்னை பாராட்ட வேணாம்

Literacy for a Billion

ரொம்ப சீராட்ட வேணாம்
ஒரு பார்வை
அது போதும்
எப்போதும்

அக்காக்கேத்த மாப்பிள்ள
எங்கிருக்கான் பயபுள்ள
அக்காக்கேத்த மாப்பிள்ள
எங்கிருக்கான் பயபுள்ள

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.